Australian Government
Department of Home Affairs

# அவுஸ்திரேலியாவுக்குள் நுழைதலும் வெளியேறுதலும்

## சமீபத்திய புதுப்பிப்பு

ஜூலை 6, 2022 முதல் அவுஸ்திரேலியாவுக்குள் நீங்கள் வரும் விதமும் செல்லும் விதமும் மாறியுள்ளது. அனைத்துப் பயணிகளும் தெரிந்துகொள்ள வேண்டியது:

- அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் மக்கள் தடுப்பூசி போட்டுக்கொண்ட சான்றினை வழங்கத் **தேவையில்லை**
- அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் மக்கள் பயணிப்பவரின் டிஜிட்டல் உறுதிமொழியையோ அல்லது கடல்சார் பயண உறுதிமொழியையோ பூர்த்தி செய்யவேண்டிய தேவை **இல்லை**
- அவுஸ்திரேலியாவுக்குள் நுழையும் மக்கள் தடுப்பூசி போட்டுக்கொண்ட சான்றினை வழங்கும்படி கேட்கப்பட **மாட்டார்கள்**
- விசா வைத்திருக்கும் தடுப்பூசி போட்டுக்கொள்ளாதோர் அவுஸ்திரேலியாவுக்குள் பயணிப்பதற்கு பயண விதிவிலக்கு பெறத் **தேவையில்லை**
- எனினும், அவுஸ்திரேலியாவுக்குள் பயணிக்கும் விமானங்களில் முகக்கவசங்கள் அணிவது அவசியம்.

விமான நிறுவனங்கள், கப்பல் போக்குவரத்து வழங்குவோர் மற்றும் பிற நாடுகள் பயணிகள் இணங்கி நடக்க வேண்டிய குறிப்பிட்ட வலியுறுத்தல்களைக் கொண்டிருக்கலாம் என்பதை நினைவுகொள்வது முக்கியம்.

## அவுஸ்திரேலியாவுக்குள் நுழைதலும் வெளியேறுதலும்

உள்நாட்டு விவகாரத் திணைக்களமும் அவுஸ்திரேலிய எல்லைப்படையும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ விரும்பும் மக்களுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது.

மேலதிகத் தகவலுக்கு, பின்வருவனவற்றைப் பார்வையிடவும்:

- அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவது
- அவுஸ்திரேலியாவை விட்டுச் செல்லும் முன்பும், பின்பும்
- எல்லையைக் கடந்து செல்லுதல்
- பயண ஆவணங்கள்.

விசா தேவைப்படுவோர் அவுஸ்திரேலியாவுக்குள் பயணிக்கும் முன்பாக அவர்களது விசா வழங்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். அவுஸ்திரேலியாவின் விசா தேவைகளைச் சரிபார்க்க, இங்கே பார்க்கவும்: விசா விருப்பத் தேர்வுகளை அறிந்துகொள்ளுங்கள்

கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவோர் அல்லது வெளியேறுவோருக்கு அவுஸ்திரேலிய எல்லைப்படை மேலதிக ஆலோசனைகளை வழங்குகிறது.

கடல்வழியாக பயணிக்கத் திட்டமிடும் அவுஸ்திரேலியக் குடிமக்கள் தற்போதைய பயண அறிவுறுத்தல்களை Smartraveller என்ற பக்கத்துக்குச் சென்று சரிபார்க்கும்படி ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

சுகாதாரத் திணைக்களம் சர்வதேசப் பயணம் மற்றும் கோவிட்-19 மீது சுகாதார ஆலோசனைகளை வழங்குகிறது.

## மாநிலம் மற்றும் பிராந்தியம் குறித்த தகவல்கள்

அவுஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிராந்தியத்திற்கும் அவற்றிற்கென நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தேவைகள் உள்ளன. நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குப் பயணிக்கத் திட்டமிடுகிறீர்கள் எனில், நீங்கள் பயணிக்கும் மாநிலம் அல்லது பிராந்தியத்தின் தேவைகளை நீங்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இந்தத் தேவைகளில், நீங்கள் அவுஸ்திரேலியாவுக்குள் வந்தபின் கோவிட்-19 பரிசோதனை எடுத்துக்கொள்வது அல்லது குறிப்பிட்ட நிகழ்விடங்களுக்கு அல்லது குறிப்பிட்ட உத்தியோக நிமித்தம் வேலைக்குச் செல்வதற்கான தடுப்பூசித் தேவைகள் போன்றவை அடங்கும்.

மேலதிகத் தகவலுக்கு, மாநிலம் மற்றும் பிராந்தியம் குறித்த தகவல்களைப் பார்வையிடவும்.

## அவுஸ்திரேலியாவின் தடுப்பூசித் திட்டம்

அவுஸ்திரேலியாவில் உள்ள அனைவரும் கோவிட்-19 தடுப்பூசியை இலவசமாகப் பெறலாம். அவுஸ்திரேலியாவுக்குள் வருகை தரும் சர்வதேசப் பயணிகள் அவுஸ்திரேலியாவின் கோவிட்-19 தடுப்பூசித் திட்டத்தைப் பெற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

மேலதிகத் தகவலுக்கு, கோவிட்-19 தடுப்பூசிகளைப் பார்வையிடவும்.

## விசா சலுகைகளும் பணத்திருப்பங்களும்

கோவிட்-19 பெருந்தொற்றுக்காலத்தின் தாக்கம் காரணமாக, சில விசா வகையினங்களில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இதில் சலுகைக்காலங்களை அறிமுகப்படுத்தியது, கட்டணத் தளர்வுகள் மற்றும் விசா பணத்திருப்பங்கள் போன்றவையும் அடங்கும்.

மேலதிகத் தகவலுக்கு, கோவிட்-19 விசா குறித்த தகவல்களைப் பார்வையிடவும்.